1991 சனவரி 25]

துள்ளதைக் கருத்தில் கொண்டு கலைஞர் அரசு, கல்லூரி மாணவர்களுக்குத் தகுதி அடிப்படையில், சென்னையில் தனிப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்துவது மகிழ்ச் சிக்கு உரியதாகும். இதை எல்லா இடங்களிலும் அமல் படுத்தாவிட்டாலும், முக்கியமான நகரங்களாகிய மதுரை, திருச்சி மற்றும் கோவை போன்ற நகரக் கல்லூரிகளுக்கு விரிவு செய்தால் மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாண வர்கள் அனைத்து மாவட்டங்களிலும் பயன் பெற முடியும். இதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட பல கருத்துக்கள் இருக்கின்றன. அவை பரிசீலனைக்கு உரியன. ஆனால் உறுதிமொழி ஆகாது.

திரு. வீ. பெ. துரைசாமி : (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டில் அதிகம் பேர் ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகளில் தேர்வு செய்யப்பட வேண்டும், அவர் களை ஊக்கப்படுத்த வேண்டுமென்று தமிழக அரசு, ''கார்த்திகேயன் கமிட்டி'' என்ற ஒரு குழுவை நியமனம் செய்தது. அந்தக் குழுவினுடைய பணி என்ன ? அந்தக் குழு அரசுக்கு ஏதாவது பரிந்துரை வழங்கியிருக்கிறதா ? அதன் மீது அரசு ஏதாகிலும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்தக் குழு சற்று விரிவான அறிக்கையை வழங்கியிருக்கிறது, பல்வேறு நிலைகளில் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு ஆலோசனை தெரிவித்திருக்கிறார்கள். அந்த நல்ல ஆலோ சனைகள் அரசாலும், அதேபோல பல்கலைக் கழகங்களாலேயும் பரிசீலிக்கப்பட்டு, ஒல்லும் வகையால் நிறைவேற்றப்படுகின்றன.

9-10 மணி

பகுத்தறிவுக் கருத்துக்களைப் பாடமாக வைத்தல்.

*12020 திரு. இ. புகழேந்தி :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற தலை வர்களின் பகுத்தறிவுக் கருத்துக்கள் பள்ளிக்கூடங்களில் பாடங் களாக வைக்கப்படுமா ?

[1991 சனவரி 25

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற தலைவர்களின் பகுத்தறிவுக் கருத்துக்கள் அடங்கிய பாடங்கள் மற்றும் பாடல்கள், பள்ளிப் பாடநூல்களில் ஓரளவு இடம் பெற்றுள்ளன.

திரு. இ. புகேழந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மதக் கலவரங்களின்றி, மனிதநேய உணர்வுகள் வளர்ந்திருக்கின்றன என்றாலும், தமிழகம் இப்படி அமைதிப் பூங்காவாக விளங்குவதற்கு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியவர்களுடைய இடைவிடாத பகுத்தறிவுப் பணிகள் ஒரு காரணமாகும். அப்படிப்பட்ட உலகின் ஒப்பற்ற சிந்தனையாளர்களான தந்தை பெரியார், அண்ணா ஆகியோரின் பகுத்தறிவுக் கருத்துக்களை, மாணவர்கள் இளம் வயதிலேயே பள்ளிக்கூடங்களில் பயில்வது, எதிர்காலத் தமிழகத்திற்குச் சிறப்பூட்டும். ஆகவே, விஞ்ஞானிகள், உலக நாத்திகவாதிகள், பகுத்தறிவுவாதிகள் ஆகியோரின் கருத்துக்களைத் தொகுத்து, 'பகுத்தறிவு விஞ்ஞானம்' என்ற ஒரு புதிய பாடப்பிரிவினை உருவாக்கி, அதை மாணவர்கள் விருப்பப் பாடமாகப் பயில்வதற்கு—பயில வைப்பதற்கு, அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனை சிந்திக்க வைக்கிற அந்த முயற்சியிலேகூட, பல்வேறு படிநிலைகளிலேதான் அவற்றை நிறைவேற்ற முடியும். அவர்களுடைய வயது, அவர்கள் பெறுகிற கல்வி, அவர்கள் பெறவேண்டியப் பொது அறிவு இவைகளைக் கருத்திலே கொண்டு, பாடத் திட்டம் அமைக்கிற போது, பகுத்தறிவுக் கருத்துக்களைத் தனியாக ஒரு மதம் போல—ஒரு கட்சிக் கொள்கையைப் போல—தனியாக ஒரு பாடமாகப் புகுத்துவது என்பது அவ்வளவு சிறப்பல்ல. அறிஞர் அண்ணாவோ, தந்தை பெரியாரோ, பாவேந்தர் பாரதிதாசனோ, டாக்டர் அம்பேத்கரோ, இன்னும் பல்வேறு உலகம் பாராட்டுகிற அறிஞர்களோ சொன்ன கருத்துக்கள், அவர்களைப் பற்றிய குறிப்பு வருகிறபோது, அவர்கள் வாயிலாக வந்த ஒன்றிரண்டு கருத்துக்கள் இடம்பெறுவதன் மூலமாகத்தான் பக்குவமாக இளம் உள்ளங்கள் அந்தத் தெளிவைப் பெற முடியும் என்பது என்னுடைய எண்ணமாகும்.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, நம்முடைய தமிழக முதல்வர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர், மாண்புமிகு கல்வியமைச்சர் இனமானக் காவலர்

1991 சனவரி 25]

பேராசிரியர் ஆகியோர்கள் உரையாற்றிய கட்டுரைத் தொகுப்புகள், வெளியிட்டு செயல்படுத்திய அத்தனையையும் அரசே மலிவு விலையில் புத்தகமாகக் கொடுப்பதற்குச் செயல்படுமா? அப்படிப்பட்ட கருத்தினைப் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மலிவு விலையிலே தரப்படுமா என்று கேட்டார்கள். அது தனிக் கேள்வியாக இடம் பெற வேண்டும். இருந்தாலும், அவையெல்லாம் மிகவும் மலிந்துபோய் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் (திருமதி) காஞ்சனா கமலநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்கு இணையாக நூல் யாத்துக் கொடுத்த புலவர் குழந்தையின் 'இராவண காவியம்' பள்ளிக்கூடங்களில் பாடமாக வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாடங்களைத் தெரிவு செய்வது என்ற நிலையிலே உள்ள குழு, ஒவ்வொரு நூற்றாண்டிலே, ஒவ்வொரு கவிஞருடைய கருத்தின் ஒவ்வொரு பகுதியை, ஒரு பத்து அல்லது இருபது பாடல் என்று தெரிவு செய்துதான் பாடமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். 'இராவண காவியம்' போன்ற நூல்கள் பல்கலைக் கழகத்திலே தமிழில் சிறப்புத் தேர்ச்சி பெறுகிற மாணவர்கள் பயிலக்கூடிய ஒரு சிறந்த இலக்கியமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில பாடல்கள் பாடத்திலே சேர்க்கப்பட்டுள்ளன. செய்திக்காகச் சொல்கிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, எதிர் காலத்திலாவது மூடப் பழக்க வழக்கங்களையுடைய பாடப் புத்தகங்களையெல்லாம் அகற்றி, இன்றைக்கு சமூகத் துறையிலே ஏற்பட்டிருக்கக்கூடிய விஞ்ஞான வளர்ச்சியைக் கருத்திலே கொண்டு, அதிகப்படியான அளவுக்கு விஞ்ஞானங்களை எடுத்துச் சொல்கிற அடிப்படையிலே, பாடப் புத்தகங்களை அமைப்பதோடு, கற்பனா வாதங்களும், பழமை வாதங்களும் உள்ளடக்கிய பாடத் தொகுப்புக்களை அகற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல நோக்கத்தோடு கேட்கப்பட்ட கேள்விதான் என்றாலும்கூட, பண்பாட்டு அடிப்படையிலே உள்ள பழைய நூல்களில் இடம் பெற்றுவிடுகிற பழைய கருத்துக்களிலிருந்து விடுபடுவது அவ்வளவு எளிதல்ல. புதிய சிந்தனைகள் பிறப்பதன் மூலமாகத்தான், அவர்களாகத்தான் அந்தச் சிந்தனையை மாற்றிக் கொள்ள வேண்டும். இருந்தாலும்கூட, தீண்டாமையைப் புலப்படுத்துகிற கருத்து, சாதி வேற்றுமை அடிப்படையிலே சில சாதிகளைக் குறிப்பிடுகிறபோது இழிவு தோன்றுகிற கருத்து, மத வேற்றுமைகளை வளர்க்கிற கருத்து அல்லது பகைமையை வளர்க்கிற கருத்து அல்லது யாராவது ஒருவரைப் பற்றிய குறிப்பில் முரண்பாடு அல்லது பகையை ஏற்படுத்தக்கூடிய அப்படிப்பட்ட கருத்துக்கள் இல்லாமல் பாடப்புத்தகங்கள் அமைய வேண்டும் என்பது தான் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையாகும்.

9-15 மணி

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகப் பள்ளிப் பாடப் புத்தகங்களில் பெண்களைச் சமத்துவம் அற்ற முறையில் சித்தரிப்பதைக் கைவிட வேண்டும் என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். குறிப்பாக, ஒன்றாம் வகுப்புப் புத்தகத்தில் ஒரு படம் போட்டுக் காட்டப்படுகிறது. அதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலை செய்வதாகக் காட்டப்படுகிறது. அப்பா என்ன செய்து கொண்டிருக்கிறார் என்றால் பேப்பர் படிக்கிறார் ; அம்மா சமையல் செய்கிறார் ; அண்ணன் படிக்கிறான் ; ஆனால் தங்கை என்ன செய்கிறாள் என்று சொன்னால் வீடு பெருக்குகிறாள். இப்படிச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. பெண் குழந்தைகள் எல்லாம் படிக்க வேண்டும் என்று ' ' சார்க் ' ' நாடுகள் அறிவித்திருக்கக்கூடிய சூழ்நிலையில் நம்முடைய அரசும் அதுபோன்ற படங்களை எடுத்துவிட்டு, பெண் குழந்தைகள் படிக்க வேண்டும் என்ற முறையில் இதைக் கொண்டுவர முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மையார் அவர்களுடைய கருத்து வரவேற்கத்தக்கது. ஆனால் 100-க்கு 70 பெண் குழந்தைகள் என்ன செய்கிறார்களோ அதைத்தான் எழுதிக் காட்டியிருக்கிறார்கள். 100-க்கு 30 பெண் குழந்தைகள்தான் படிக்கிற ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கியுள்ளோம். அனைவரும் படிக்கும் நிலையை உருவாக்க வேண்டி இருக்கிறது. அது அரசினுடைய நோக்கம். எனவே பெரும்பான்மையாக உள்ள சூழ்நிலையில் கருத்துக்கள் இடம் பெறுவதை அடியோடு தவிர்க்க முடியாது. உண்மைகளைப் புரிந்துகொள்வதன் மூலமாகத்தான் நியாயம் வெற்றி பெறும் என்பது என்னுடைய எண்ணம்.